1970 ஏப்ரல் 6]

திரு. கொ. இர. ஞானசம்பந்தம் ஊராட்சி மன்ற, நகராட்சி மன்ற பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கும் இந்த அடையாள கார்டு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு மட்டும்தான் இந்த அடையாளக் கார்டுகள் வழங்கப் படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு சான்றிதழ் முறைதான் இருக்கும் என்று கருதுகிறேன். அது மறுபடியும் யோசிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 694, 695 எண்ணுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Model farms in Tamil Nadu

***696 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—**

(*a*) whether the Government has invited Messrs. CIBA of India to run a model farm in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : இந்த சிபா ஆஃப் இன்டியா கம்பெனியுடன் நமது மாநிலத்தின் விவசாய அபிவிருத்தி பற்றி என்ன பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ரூ. 40,000 செலவில் இப்படிப்பட்ட வேளாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் முன்வந்தார்கள். அவர்களே விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து இவைகள் அத்தனையும் கொடுத்து, அறுவடையானதற்குப் பிறகு அதை வசூலித்துக் கொள்கிற ஒரு முறையை அவர்கள் கொடுத்தார்கள். இதற்கு அவர்கள் அரசாங்கமே, ஸ்விட்சர்லண்டு அரசாங்கமே இன்னும் ஒப்புதல் தரவில்லை. எனவே இப்பொழுது இந்தத் திட்டம் விடப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, about one thousand acres of poramboke land is available in Hosur Taluk and the climate and other factors are favourable and so will the Hon. Minister be pleased to recommend to Messrs. CIBA of India to start a model farm at Hosur.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது மாடல் பார்ம் இல்லை. விவசாயிகளை குறிப்பிட்ட சில இடங்களில் எடுத்து, அவர்களுக்கு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து, அவை அத்தனையும் இந்தக் கம்பெனிக்காரர்கள் கொடுக்கிற ஒரு திட்டத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு அவர்களுடைய அரசாங்கத்திலிருந்து, ஸ்விட்சர்லண்டிலிருந்து இன்னும் ஒப்புதல் வரவில்லை. எனவே, அரசாங்கம் ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. இது மாடல் பாரம் அல்ல.